2010 ஏப்ரல் 28]

விடுதிகள் அமைக்க வேண்டும் என்பதும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை. ஆனால் எங்களைப் பொறுத்தவரையில், இந்தத் துறையின் சார்பாக, இந்தத் துறைக்குச் சொந்தமான இடம் எதுவும் இல்லை. இருந்தாலுங்கூட, கடற்கரையை மேம்படுத்தக்கூடிய அளவிற்குத் துறை பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

118—

நெல் கொள்முதல் நிலையம்

***33687—திரு. தி. இராமசாமி:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்புப் பேரூராட்சியில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பில் 2009-2010 ஆம் ஆண்டு நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டு, நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இதுவரை கொள்முதல் செய்யப்பட்ட நெல்லின் அளவு 33 டன்கள் ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.*

திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்திற்கு 11 இலட்சம் மக்கள் பயன்பெறக்கூடிய முறையில் ரூ.1,082 கோடியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் எங்கள் மாவட்ட அமைச்சர் பெருமக்களுக்கும் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வத்திராயிருப்பில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

[2010 ஏப்ரல் 28

ஐயாயிரம் ஏக்கர் நன்செய் மற்றும் இரண்டாயிரம் ஏக்கர் புன்செய் நிலத்திலும் அங்கு நெல் விளைந்து கொண்டிருக்கிறது. அந்தப் பகுதி விவசாயிகள், தனியார் வியாபாரிகளிடம் நெல்லைப் போட்டுவிட்டு, பணம் கிடைக்காமல், நல்ல விலை கிடைக்காமல் தவித்துக் கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டது. ஆனால், நெல்லினுடைய ஈரப் பதத்தைக் கண்டறிவதற்கு வத்திராயிருப்பிலிருந்து 50 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கக்கூடிய தேவதானத்திற்கு விவசாயிகள் சொந்தப் பொறுப்பில் கொண்டுசென்று, ஈரப் பதத்தைச் சரிபார்த்து, அங்கே சான்று வாங்கி, அதற்குப் பின்பு திரும்ப அந்த நெல்லை வத்திராயிருப்புக்குக் கொண்டுவந்து கொள்முதல் நிலையத்தில் விற்க வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. எனவே, அலைச்சலுக்கு ஆற்றமாட்டாமல் விவசாயிகள் பெரும்பாலும் களத்திலேயே நெல்லை விற்கக்கூடிய ஒரு நிலை இருக்கக்கூடிய சூழ்நிலையில், அங்கே வரக்கூடிய வியாபாரிகளிடம் நெல்லைப் போட்டுவிட்டு சரியான விலை கிடைக்காமலும், அரசு அமைத்துக் கொடுத்த . . .

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராமசாமி, சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. தி. இராமசாமி: கொள்முதல் நிலையங்களைச் சரியாகப் பயன்படுத்த முடியாத நிலையும் இருக்கின்றது. எனவே, கொள்முதல் நிலையத்தைச் சரியான முறையில் செயல்படுத்த, ஈரப் பதத்தைக் கண்டறியக்கூடிய அந்த நிலையத்தையும் சேர்ந்தாற்போல் அமைத்துக் கொடுத்து, அந்தக் கொள்முதல் நிலையத்தைப் பயன்படுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்தைப் பொறுத்த அளவுக்கு, இராஜபாளையம், சேத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு ஆகிய பகுதிகளிலே விவசாயிகளுடைய நன்மையைக் கருதி நேரடிக் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டுகூட எடுத்துக்கொண்டால், 492 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. ஈரப் பதத்தைப் பொறுத்த அளவுக்கு,

2010 ஏப்ரல் 28]

ஆங்காங்கே நேரடிக் கொள்முதல் நிலையங்களிலேயே அதைப் பார்ப்பதற்காக ஒரு மானிட்டர் இருக்கிறது. அதை வைத்துப் பார்த்துக்கொள்ளலாம். இதனை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எங்களுடைய தகவலுக்குக் கொண்டு வந்திருக்கிற காரணத்தினால், வத்திராயிருப்பைப் பொறுத்த அளவுக்கு நாளைய தினமே ஆய்வு செய்து, தொடர்ந்து அங்கேயே ஈரப் பதத்தையும் பார்க்கின்ற நிலையை உருவாக்கித் தர முடியும். அதோடு மட்டுமல்ல; இந்த நேரடிக் கொள்முதல் நிலையங்கள் இல்லாத, அங்கேயே கொள்முதல் செய்ய முடியாத பகுதிகளில், விவசாயிகளுக்காகக் கூட்டுறவுச் சங்கங்களின் சார்பாகக்கூட நெல்லை வாங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு ஆணை பிறப்பித்தார்கள். அந்தவகையிலே, ஆங்காங்கு கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகக்கூட நேரடிக் கொள்முதல் செய்யப்படுகிறது. அப்படி எங்கேயாவது அந்தப் பகுதியிலே நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர்கள் கருதுவார்களேயானால், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே சொன்னாலே போதும். மாவட்ட ஆட்சித் தலைவருக்கே முழு அதிகாரமும் அரசின் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் உடனே அந்தப் பகுதியில் கொள்முதல் நிலையங்களைத் திறப்பதற்காக, நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய மேலாளரை அழைத்து, மறுதினமே அதனைத் திறக்க முடியும். எனவே, மாவட்ட ஆட்சித் தலைவரைப் பார்த்து நீங்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். வத்திராயிருப்பைப் பொறுத்த அளவிற்கு, இந்த ஈரப் பதத்தைப் பார்க்க ஒரு குறிப்பிட்ட அளவு தூரத்திற்குப் போக வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அப்படி ஒரு நிலை இருக்குமேயானால், நாளைய தினமே சம்பந்தப்பட்ட அதிகாரியை அழைத்து, வத்திராயிருப்பிலேயே நெல்லினுடைய ஈரப் பதத்தைப் பார்க்க வேண்டிய ஏற்பாடுகளை இந்த அரசு கண்டிப்பாகச் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

திரு. தி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலுரைக்கு நன்றி. ஆனால் அதேசமயத்தில், 4 மையங்களில் கிட்டத்தட்ட 500 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அதைக் கொஞ்சம் விளம்பரப்படுத்தி, நெல்லுக்கு இப்போது 1,100 ரூபாய் அரசு

அறிவித்திருக்கக்கூடிய அந்த விலை கிடைக்கும் என்பதை விவசாயிகளிடம் கொண்டு சென்று, நெல்லைக் கொள்முதல் செய்கின்றபட்சத்தில் அதிகமான நெல்லை விவசாயிகள் கொண்டு வருவார்கள்; அப்படி வரும்போதே, தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய பகுதியான அந்த வத்திராயிருப்பில் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் ஒரு அரிசி அரைவை ஆலையை அமைத்துக் கொடுப்பதற்கும் அரசு முன்வருமா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வியாபாரிகள் குறைந்த விலையிலே வாங்குகிறார்கள் என்கிற காரணத்தினால்தான் விவசாயத் துறை மூலமாகக்கூட ஆங்காங்கு விழிப்புணர்வுகளை உருவாக்குகிற நிகழ்ச்சிகளிலே, விவசாய அலுவலர்கள்கூட நேரடியாக விவசாயிகளிடம், தலைவர் கலைஞர் ஆட்சியிலே ஊக்கத் தொகையோடு சன்ன ரகத்திற்கு ரூ.1,100/-ம், சாதாரண ரகத்திற்கு ரூ.1,050/-ம் தருகிறார்கள் என்று கூறி விழிப்புணர்வுகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர்கள்கூட, அரசு நிகழ்ச்சிகளிலே கலந்துகொள்ளுகிறபோது, அந்தச் செய்திகளையெல்லாம் சொல்லுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கக்கூடிய நீங்கள்கூட அரசு நிகழ்ச்சிகளிலே கலந்துகொள்கிறபோது அந்தச் செய்தியைப் பொதுமக்களுக்குத் தெரிவிக்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவர்களால் வாரத்திற்கு ஒரு முறை கூட்டப்படுகின்ற விவசாயிகளுடைய கருத்தரங்கிலே மாவட்ட ஆட்சித் தலைவர்கூட, 'நீங்கள் நேரடியாக அரசின் சார்பாக திறக்கப்பட்டிருக்கக்கூடிய நேரடிக் கொள்முதல் நிலையங்களிலே போய், நெல்லை அங்கே விற்கலாம்' என்று சொல்லுகிறார்கள். அதையெல்லாம் விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளலாம். இன்னும், நம்முடைய நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலமாக இன்னும்கூட விவசாயிகளுக்கு இந்த விழிப்புணர்வை இந்த அரசாங்கம் ஏற்படுத்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி.

திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் இடதுகரையினுடைய கடைப் பகுதியாக இருக்கின்ற

2010 ஏப்ரல் 28]

திருச்செங்கோடு தொகுதி, பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியப் பகுதி முழுவதும் நெல் விளைச்சல் உள்ள பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், உரிய நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதைக் கேட்டுக்கொள்வதோடு, இங்கே மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கின்றபோது கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாகக்கூட ஏற்பாடு செய்யப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். நெல் கொள்முதல் நிலையம் அமைக்க முன்வரவில்லையென்றால் கூட்டுறவுச் சங்கங்களின்வாயிலாக வாங்க அரசு முன்வருமா என்பதைக் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு அந்தக் குறிப்பிட்ட விலையை ஊக்கத் தொகையோடு தரவேண்டுமென்று தலைவர் கலைஞர் அரசு கருதிய காரணத்தினால்தான், தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் 1368 நேரடிக் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. அதுவும் குறிப்பாக, திருச்செங்கோடு, திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம், போன்ற காவிரி டெல்டா அல்லாத பகுதிகளிலே 167 நேரடிக் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. அப்படி நேரடிக் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்ட காரணத்தால்தான், சுமார் 2.65 இலட்சம் டன் நெல் இப்போது வாங்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவு நிருவாகத்தின் சார்பாகவும் நேரடியாகக் கொள்முதல் செய்யலாம் என்று ஏற்கெனவே ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. புதிதாகச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கெனவே ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டுகூட 25,891 டன்கள் கூட்டுறவு நிருவாகத்தின்மூலம் வாங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த இடத்திலே வேண்டுமென்று கருதினால், நாளைய தினமே நீங்கள் மாவட்ட ஆட்சியரிடத்திலே தகவலைச் சொன்னால், நேரடிக் கொள்முதல் நிலையங்களைத் திறப்பதற்காக, நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய மேலாளர் வந்து மாவட்ட ஆட்சியரிடத்தில் அனுமதியைப் பெற்று உடனடியாக அந்தப் பகுதியிலே நேரடிக் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும்.

[2010 ஏப்ரல் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்முதல் நிலையங்களைத் திறக்கின்றபோது, அவற்றை விவசாயிகள் அறுவடை செய்கிற நேரத்தில் காலதாமதமாகத் திறப்பதால், அவர்கள் வியாபாரிகள்மூலமாக விற்பனை செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அது மட்டுமல்ல; கொள்முதல் நிலையங்களில், ஈரப்பதம் இருக்கிறது என்று கோடிட்டுக் காட்டி, வியாபாரிகள் கொண்டு வந்தால் அதை ஏற்றுக்கொள்வதும், விவசாயிகள் அதே நெல்லை எடுத்துச் சென்றால் அதை வாங்காது மறுப்பதுமான நிலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கு உடனடியாக அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை உங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற புகார்கள் ஏற்கெனவே வந்ததன் காரணத்தால்தான் ஈரப்பதம் இருந்தாலுங்கூட, அரசு குறிப்பாக நுகர்பொருள் வாணிபக் கழகம் அனுமதித்திருக்கிற அந்த ஈரப் பதத்துடன்கூடிய நெல்லை ஒரு விவசாயி 300 மூட்டைக்கு மேல் வைத்திருந்து, நேரடியாக களத்திலே வந்து எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் தொடர்புகொண்டு கேட்டால், உடனே நேரடியாகக் களத்துமேட்டிற்கேகூட சென்று நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டுமென்று இந்த ஆண்டு புதிதாக நாங்கள் ஆணை பிறப்பித்து, அப்படி நேரடியாக விவசாயிகளிடமிருந்து வாங்குகிறார்கள். கொள்முதல் நிலையங்களில் நேரடியாகக் கொண்டு வந்து விற்க முடியும். 300 மூட்டைக்கு மேலே போனால், விவசாயி சம்பந்தப்பட்ட நேரடிக் கொள்முதல் அதிகாரியை அழைத்து, அங்கே அதை விற்றுக்கொள்ள முடியும். இந்த இரண்டு நிலைகள் இருக்கிறபோது, சில விவசாயிகள் ஏமாற்றத்தின் காரணத்தால், அல்லது விவரம் தெரியாத காரணத்தினால், அவர் வியாபாரிகளிடத்திலே போடுவதை நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாது. ஏனென்று சொன்னால், ஆரம்பத்திலே

2010 ஏப்ரல் 28]

சொன்னதைப்போல, ஆங்காங்கே மாவட்ட ஆட்சியர் அவர்கள் திங்கட்கிழமை நடத்துகிற விவசாயிகள் கூட்டத்திலே நேரடிக் கொள்முதல் நிலையத்திலே நேரடியாகச் சென்று ஊக்கத் தொகையோடு நீங்கள் பெறுங்கள் என்று ஒரு விழிப்புணர்வை உருவாக்குகிறார்கள். சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற நீங்கள்கூட 'உங்கள் பகுதியிலிருக்கிற நேரடிக் கொள்முதல் நிலையத்திற்குச் சென்று போடுங்கள்; வேறு இடத்தில் போடாதீர்கள்' என்று விவசாயிகளிடம் மாண்புமிகு செங்கோட்டையன் போன்ற உறுப்பினர்கள் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதலிலே ஆண்டுதோறும் குறுவை சாகுபடிக் காலங்களிலே ஈரப் பதம் பிரச்சினைதான் காவிரி டெல்டா பகுதிகளிலே பிரதான பிரச்சினையாக இருக்கிறது. இதை முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு ஆண்டுதோறும் கொண்டு வந்து, அது மத்திய அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்று ஈரப்பதத்தினுடைய அளவை அதிகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆண்டுதோறும் செய்யப்படுகிற இந்த நடவடிக்கையை மாற்றுவதற்கும் நிரந்தரமாக ஈரப்பசை உள்ள நெல்லைக் கொள்முதல் செய்வதற்கும், அந்த அளவை உயர்த்துவதற்கான முயற்சியை மத்திய அரசிடம் பெற வேண்டியிருக்கிறதே, அதை நிரந்தர முடிவாக எடுப்பதற்காக மாநில அரசு ஏதாவது முயற்சி எடுக்கிறதா? இந்த ஆண்டுகூட மத்திய அரசாங்கத்திடமிருந்து அதற்கான அனுமதியைப் பெறுவதிலே காலதாமதம் ஏற்பட்ட காரணத்தாலே நெல் கொள்முதலிலே விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இதை ஆண்டுதோறும் காலத்தில் செய்வதற்கும், அதை மத்திய அரசாங்கம் ஒரு நிரந்தரத் தீர்வாகக் காண்பதற்கும் உரிய முயற்சியை எடுக்க இந்த அரசு, என்ன நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஈரப் பதத்தைப் பொறுத்த அளவிற்கு நாம் இரண்டைப் புரிந்துகொள்ள வேண்டும். பெறுகின்ற நெல்லைத்தான் நாங்கள் ஏற்கெனவே தனியார் முகவர்களிடத்தில் கொடுத்து, கிட்டத்தட்ட அரசின் சார்பாக நடத்திவருகின்ற rice mill-இலும் கொடுத்து அரிசியாக்கிப் பொது விநியோகக் கடைக்குத் தருகிறோம். பொது விநியோகத்திற்கு வருகின்றபோது, ஈரப்பதம் உள்ள நெல்லை அப்படியே நாம் அரைத்தோம் என்று சொன்னால், அந்த அரிசி சரியாக இருக்காது. அதில் பார்த்தால் கறுப்பு கறுப்பாக இருக்கும். அதனால்தான் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டிருக்கின்ற அந்த ஈரப்பதம் 17 என்று சொன்னால், அந்த 17 அளவிலே வாங்குகின்றோம். அதைப்போன்று, இதில் காலதாமதம் ஏற்பட வாய்ப்பே இல்லை. ஏனென்று சொன்னால், நமக்கு - Food Corporation- மத்திய உணவுக் கழகத்துடன் ஏற்கெனவே ஒப்பந்தம் இருக்கின்ற காரணத்தால், சில நேரங்களிலே இந்த ஈரப்பதத்தை எந்த அளவிற்கு வாங்க வேண்டும் என்று அனுமதி பெறவேண்டியிருக்கிறது. இந்த ஆண்டைப் பொறுத்த அளவிற்கு, தஞ்சாவூர் பகுதியிலே எங்குமே மழையே பெய்யவில்லை. ஆனாலுங்கூட, அறுவடை வருகின்றபோது, விவசாயிகள் சில நேரங்களிலே, அப்படியே பச்சையாக இருக்கின்ற நெல்லைப் போட்டுவிடவேண்டும்; அதன்மூலமாக எடை நமக்குக் கூடுதலாகக் கிடைக்கும் என்ற ஒரு நிலை நாம் கொள்முதல் செய்கின்றபோது வருகின்ற காரணத்தால், அவ்வாறு வருகின்றதேயொழிய வேறு ஒன்றுமில்லை. ஆக உடனுக்குடன், அந்த ஈரப்பதத்தைப் பொறுத்த அளவில், சென்ற ஆண்டுகூட 17 சதவிகிதம் என்று விதி இருந்தது. விவசாயிகள் சொன்னவுடனே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் அனுமதியைப் பெற்று, 20 சதவீதம் ஈரப்பதம் வரை சென்ற ஆண்டு வாங்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, பின்பு டெல்லிக்கு அனுமதிக்காக எழுதி, அதற்கு வேண்டியதையெல்லாம் பின்னால் வாங்கினோம். அதனால் விவசாயிகளைப் பொறுத்த அளவிற்கு அந்த நெல்லை நேரடியாக நஷ்டம் இல்லாமல் பெறவேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய நோக்கம். அந்த அடிப்படையில்தான் வாங்கப்படுகிறது. எனவே, இதிலே மாற்றுக் கருத்து இருப்பதற்கு வாய்ப்பில்லை. அப்படி ஏதாவது சில இடங்களில் ஈரப்பதத்துடன் உள்ள நெல்லைக்

2010 ஏப்ரல் 28]

கொடுக்க முடியவில்லையென்றால் எனக்குத் தகவல் சொன்னால், உடனே சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சொல்கிறேன். அவர்கள் சென்று ஈரப்பதத்தைப் பார்த்து வாங்குவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 119, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

119—

கல்வெட்டுகள்

***106100—திரு. கி. ஆறுமுகம்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள தமிழ் பிராமிக் கல்வெட்டுகளைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பல அரிய செய்திகளைத் தெரிவிக்கும் தமிழ் பிராமிக் கல்வெட்டுகள் தமிழ்நாட்டிலும் மற்றும் அண்டை மாநிலமான கேரளாவிலும், 30 இடங்களில் 90 கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 9 இடங்களில் உள்ள கல்வெட்டுகள் தொல்லியல் பாதுகாப்புச் சட்டத்தின்படி பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவிக்கப்பட்டு, தொல்லியல் துறையின் பாதுகாப்பில் உள்ளன. மேலும் ஐம்பை கல்வெட்டுகள் தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவிக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதைப்போன்று அரச்சலூர் இசைக் கல்வெட்டினைக் குத்தகைக்கு எடுக்கும் வகையில் உரிய திட்டக் கருத்துருக்கான ஆட்சேபனையின்மை வனத் துறையில் பெறும்வகையில், ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களின் சான்று நிலுவையில் உள்ளது. 8 பிராமிக் கல்வெட்டுகள் மத்திய தொல்லியல் துறை பராமரிப்பிலும், 1 கல்வெட்டு கேரளா மாநிலத்திலும் உள்ளன. மீதமுள்ள கல்வெட்டுகளைத் தொல்லியல் துறையின்கீழ் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.